
# காவிரி நீரைப் பாதுகாப்போம் டெல்டா விவசாயத்தைக் காப்போம்



## 1

## முன்னுரை (Introduction)

“நீரின்றி அமையாது இவ்வுலகு”, என்ற பொன்மொழிக்கேற்ப, இயற்கை கொடுத்த வரப்பிரசாதமாய் காவிரி நதி கர்நாடக மாநிலத்திலிருந்து இணை நதியான கபினி நதியுடன் சேர்ந்து (குடகு மலையில் உற்பத்தியாகும் தலைக்காவிரி நதி மற்ற ஹேமாவதி, ஆரங்கி நதிகளுடன் கலக்கிறது.) குடகு மலையில் ஆரம்பித்து கர்நாடக மாநிலப் பகுதிகளான மாண்டியா - மைசூர் மாவட்டங்கள் வழியாக தமிழக எல்லையான ஒகேனக்கல் பகுதியிலுள்ள (தர்மபுரி மாவட்டம்) பிலிகுண்டுலு என்ற பகுதிக்கு வந்தடைகிறது. இதுவரை இந்த நதியின் நீளம் 320 கிலோ மீட்டர் (கர்நாடக பகுதி) தமிழக காவிரி பகுதி இதிலிருந்து “0” எல்லை ஆரம்பித்து மீதி 480 கிலோ மீட்டர் தமிழ்நாட்டின் வழியாக மூன்று மாநிலங்களுக்குச் செல்கிறது - அதாவது தமிழ்நாடு, பாண்டிச்சேரி (காரைக்கால்) மற்றும் கேரளா மாநிலத்திற்குச் செல்கிறது. தமிழ்நாட்டுப் பகுதியில், ஒகேனக்கலிலிருந்து புறப்படும் காவிரி தண்ணீர் சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் அணையை அடைகிறது. இங்கிருந்து வெளியாகும் தண்ணீர் பவானி என்னும் இடத்தில் பவானி ஆறுடன் சேர்கிறது. அங்கிருந்து ஈரோட்டைத் தாண்டி

கரூர், முக்கொம்பு திருச்சி கல்லணை வழியாக தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்குச் சென்று பூம்புகார் என்ற இடத்தில் கடலில் கலக்கிறது. (பவானி ஆறு, நொய்யல் ஆறு, அமராவதி ஆறு, ஈரோடு மற்றும் கரூர் காவிரி நதி பகுதிகளில் சேர்கிறது.)

மேற்குறிப்பிட்ட வழியில் தமிழ்நாட்டில் காவிரித் தண்ணீர் பாய்ந்து தமிழ்நாட்டின் விவசாயத்திற்கும் முக்கியமாக டெல்டா பகுதிகள் **விவசாயத்திற்கும்** மற்றும் **குடிதண்ணீருக்கும்** ஒரு **ஜீவநதியாக** (Irrigation and drinking water) விளங்குகிறது. பாரத நாட்டின் வளர்ச்சிக்கு விவசாய முன்னேற்றமும், தொழில் முன்னேற்றமும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதில் தமிழ்நாட்டில் விவசாய வளர்ச்சிக்கு காவிரி நீர் மிகவும் உறுதுணையாக இருந்து வருகிறது. இது ஒரு இயற்கையான அமைப்பில் சில செயல் திட்டங்கள் மற்றும் அணைகள் - நீர்ப்பாசனக் கால்வாய்கள் மூலம் விவசாயத்திற்கு பயன்பட்டு வருகிறது. இருப்பினும் கடவுள் இயற்கையைப் படைத்தான்; மனிதன் எல்லையை உருவாக்கினான் என்ற வரிகளுக்கேற்ப காவிரி நீர் பங்கீடு பிரச்சனை கடந்த சுமார் 125 ஆண்டுகளாக இருந்து வருகிறது. அன்றைய காலக்கட்டத்தில் அன்றைய ஆங்கிலேய அரசு, காவிரி நீர் பங்கீடு முறையை ஓர் ஒப்பந்தம் மூலம் பங்கீடு செய்ய வேண்டுமென்று சென்னை மாகாணத்திற்கும், மைசூர் மாகாணத்திற்கும் இடையே ஒப்பந்தம் உருவாக்க முயற்சித்தது. அதே சமயம் மைசூர் மாகாணம், சென்னை மாகாண நிர்வாக அமைப்பின் கீழ் ஒரே மாகாணமாகத் திகழ்ந்து வந்தது. அதாவது சென்னை மாகாணத்தில், இன்றைய தமிழகம், கர்நாடக மாநிலம், கேரள மாநிலம் மற்றும் ஆந்திர மாநிலம் (பாண்டிச்சேரி தவிர - பிரெஞ்சு ஆதிக்கம்) அடங்கியதாகும். ஆங்கிலேயர் காலக்கட்டத்தில் இப்படிப்பட்ட நிர்வாக அமைப்பின் மூலம் சென்னை மாகாணம் செயல்பட்டு வந்தது. அந்த அரசியல் அமைப்பிற்கு மெட்ராஸ் பிரசிடன்சி - Madras Presidency என்று பெயர். மேற்குறிப்பிட்ட ஒரு நிலையான அரசாங்கம் செயல்பட்டு வந்தாலும், காவிரி நதி நீர் பங்கீடு விஷயத்தில் சென்னை மாகாணத்திற்கும், மைசூர்

மாகாணத்திற்கும் அவ்வப்போது பிரச்சனை ஏற்பட்டு வந்தது. அதை முன்னிட்டு, **1892 ஆம் ஆண்டு** ஆங்கிலேய அரசின் முன்னிலையில், இரண்டு மாகாணங்களுக்கும் சில ஒப்பந்தங்களுடன் காவிரி நதிநீர் **பங்கீட்டு முறை ஒப்பந்தம்** உருவாக்கப்பட்டது. அதாவது இரு மாகாணங்களும் தண்ணீரை சமமாக பிரித்துக் கொள்வதற்கும், அந்தந்த மாகாணப் பகுதியில் ஓடும் காவிரி ஆற்றில் அணை கட்ட வேண்டுமென்றால் இரு மாகாண அரசியல் பிரதிநிதிகள், அரசாங்கத்திலுள்ள நிர்வாகப் பிரதிநிதிகளின் ஒப்புதலோடு கட்ட வேண்டுமென்று ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. எனினும் இரு மாகாணங்கள் இடையே பனிப்போர் நிகழ்வதுபோல் காவிரி நீர் பங்கீடு முறையில் அவ்வப்போது பிரச்சனைகள் இருந்து வந்தது. அதைத் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் இரு மாகாணங்களிடையே அவ்வப்போது நடந்துகொண்டு வந்தது. இப்படியே காலம் கடந்தது.

ஆனால் இறைவனுடைய சக்தியால் மனிதனுடைய தேவையை அறிந்து இறை சக்தி **கனமழையாகப் பொழிந்து** காவிரியில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அதை முன்னிட்டு கர்நாடகாவிலிருந்து காவிரித் தண்ணீர் எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் தமிழக விவசாயத்திற்கும், குடி தண்ணீருக்கும் வந்து கொண்டிருந்தது. ஆனால் அவ்வப்பொழுது சில வருடங்களில் பருவ மழை பொய்த்துப் போகும் போது காவிரி நதி நீர் பங்கீடு பிரச்சனை இரு மாநிலங்களிடையே விஸ்வரூபம் எடுத்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனிதன் இறைவனைவிட புத்திசாலியானவன் என்பதைக் காட்டும் வகையிலும் மனிதனின் விஞ்ஞான வளர்ச்சியை நீர்பாசனத் திட்டத்தில் உபயோகித்தால் நம்முடைய கர்நாடக மாநிலத்திற்கு மட்டும் தேக்கி வைக்கலாம் என்று ஒரு சிந்தனை மைசூர் மாகாணத்திற்குத் தோன்றியது. அதை முன்னிட்டு அன்றைய மைசூர் மகாராஜா திருவாளர்.கிருஷ்ணராஜ உடையார் (His Highness Krishna Raja Udaiyar-iv ) காவிரி நீர் உருவாகும் பிரதான குடகு மலையிலிருந்து சில தூரத்தில் அதாவது நீர் தொடக்கப் பகுதியில் (TMC - Thousand Million Cubic Feet) அதிகக் கொள்ளளவு கொண்ட

கண்ணம்பாடி என்ற இடத்தில் அணையைக் கட்டினார். இந்த அணையைக் கட்டுவதற்கு ஆங்கிலேய அரசின் பொறியாளர்களும், நம்முடைய இந்திய அரசின் பொறியாளர்களில் முக்கியமானவரான தலைமைப் பொறியாளர் சர்.M.விஸ்வேஸ்வரய்யா (PWD Chief Engineer) மற்றும் T.ஆனந்தராவ் (Diwan of Mysore) அவர்களின் திறமையான வடிவமைப்பு மூலமும், மேற்பார்வைகளுடனும் அணை 1924-ல் கட்டி முடிக்கப்பட்டது. (1911-1924) அதற்கு கிருஷ்ணராஜ சாகர் (KRS Dam) அணை என்று பெயரிடப்பட்டது. இதை அறிந்த சென்னை மாகாணம், முந்தைய ஒப்பந்தத்திலிருந்து மைசூர் மாகாணம் விலகி விட்டதென்ற கருத்தைக் கொண்டு, வல்லவனுக்கு வல்லவன் உண்டு என்ற தத்துவத்தின் அடிப்படையில் சென்னை மாகாணம் ஆங்கிலேய அரசின் துணையுடன், அதாவது ஆங்கிலேய அரசின் நிர்வாகிகள் மற்றும் பொதுப்பணித் துறை பொறியாளர்கள் மூலம் நம்முடைய சேலம் மாவட்டத்தில் காவிரி பாயும் பகுதியில் மேட்டூர் அணையை 1925-ல் கட்டத் தொடங்கியது. அது 1934-ல் முடிக்கப்பட்டது. அதை Col.WM.எல்லீஸ் - Royal Engineer அவர்களின் மேற்பார்வையால் கட்டப்பட்டது.

மேற்குறிப்பிட்ட இரண்டு அணைகள் மூலம் அந்தந்த மாகாணங்களுக்குத் தேவைப்படும் தண்ணீரை அவரவர் கட்டுப்படுத்திக் கொண்டு விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டிருந்தார்கள். இதன்மூலம் அந்தந்த மாகாணப் பகுதியில் விவசாயம் செழித்தோங்கியது. இருப்பினும் இரு மாகாணங்கள் இடையே பழைய ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் **1924-ல் அதாவது** மேற்குறிப்பிட்ட இரண்டு அணைகள் கட்டப்பட்ட காலக்கட்டத்தில் **புதிய ஒப்பந்தம்** இரு மாகாணங்களிடையே ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நிபந்தனையாக அதாவது, **இந்த ஒப்பந்தம் 50 ஆண்டுகள் வரை நிலையாக நீடிக்கும் என்று உருவாக்கப்பட்டது.** அதுவரை இந்த ஒப்பந்தத்தின்படி தான் இரண்டு மாகாணங்களும் காவிரி நதி நீர் பங்கீட்டைப் பகிர்ந்து

கொள்ள முடியும் என்ற நிபந்தனை உறுதியாக நிற்குமென்று ஏற்படுத்தப்பட்டது.

குறிப்பு: சென்னை மாகாணத்தில் மேற்குறிப்பிட்ட காலக்கட்டத்தில் மேட்டூர் அணை கட்டி முடிக்கப்பட்டது. அதேசமயம் முந்தைய காலக்கட்டத்தில், காவிரி நீர் பாயும் பகுதியில் அகண்ட காவிரி பகுதியில் முசிறி மற்றும் குளித்தலையைத் தாண்டி கரூர் அடுத்து **முக்கொம்பு** என்ற இடத்தில் அணை கட்டப்பட்டு இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஓடும் காவிரி நீரானது அதிகத் தண்ணீர் வரும் பொழுது கொள்ளிடம் ஆற்றுப் பிரிவிற்குத் திருப்பி விடப்பட்டு வெள்ளப்பெருக்கு ஏற்படாத வண்ணம் தடுக்கப்படுகிறது. இதற்கு முன்பு மாயனூர் என்ற இடத்தில் ஒரு தடுப்பு அணையும் உள்ளது. (காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறு - இரு பிரிவுகளால் ஒரு சிறிய தீவு உருவாகி அதுவே ஸ்ரீரங்கம் ஆகும். அதாவது, அகண்ட காவிரி, காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறாக இரு பிரிவுகளாக முக்கொம்பு மேல் அணையால் பிரிகிறது.) பெரும்பாலும் கொள்ளிடம் ஆறு வறண்டு காணப்படும். வெள்ளம் அதிகமான காலகட்டத்தில் மட்டும் தண்ணீர் ஓடி வீராணம் ஏரியிலும், சிதம்பரம் அருகிலுள்ள கடலிலும் கலக்கிறது. இந்த அமைப்பில், முந்தைய காலக்கட்டத்தில் சோழ நாட்டு மன்னராக இருந்த **கரிகால் சோழன்** இரண்டாம் நூற்றாண்டில் அந்த பிரதான காவிரி நதிப் பகுதியில் திருச்சிக்கு அருகில் ஒரு அணையைக் கட்டினார். அந்த அணையின் பெயர் **கல்லணை ஆகும்.** அந்த அணையிலிருந்து வெளியேறும் தண்ணீர் தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் வரை சென்று பூம்புகாரில் கடலில் கலக்கிறது (வங்காள விரிகுடா கடல்). மேலும் இந்த அணையின் மூலம் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலக்கட்டத்தில் கொள்ளிடம் ஆற்றுக்குத் தண்ணீர் திருப்பிவிடப்படுகிறது. அதற்குத் தகுந்த பொறியியல் சார்ந்த கதவுகள் கல்லணையில் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் தஞ்சை மாவட்டப் பகுதிகளிலும், தஞ்சை நகரிலும் வெள்ளம் பாதிக்காமல் தடுக்கப்படுகிறது. ஆகவே, கொள்ளிடம் ஆறு ஒரு பாதுகாப்பான ஆறாகவும், வடிகாலாகவும்

பயன்படுகிறது. 2018-ஆம் ஆண்டு பெய்த கனமழையால், கொள்ளிடம் ஆற்றில் அதிக அளவு தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதனால் வீராணம் ஏரி நிரம்பி முழு கொள்ளவை எட்டியது.


அதைத் தொடர்ந்து KRS மற்றும் காவிரியின் இணை நதியான கபினியிலிருந்து கிடைக்க வேண்டிய தண்ணீர் சென்னை மாகாணத்திற்கு பிரச்சனையுடன் கொடுக்கப்பட்டு வந்தது. அதாவது 'இறைவன் அள்ளிக் கொடுப்பான், மனிதன் கிள்ளிக் கொடுப்பான்" என்ற பழமொழிக்கேற்ப மைசூர் மாகாண காவிரி தண்ணீர் நிர்வாகம் நடந்து கொண்டது. எனினும் எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் இருக்கிறார் என்ற தமிழக மக்களின் நம்பிக்கை வீண் போகவில்லை. காவிரி நீர் பிடிப்புப் பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் தென்மேற்குப் பருவமழை காரணமாக கனமழை பொழிந்து கொட்டியது. (குறிப்பாக இந்த ஆண்டு 2018-ல் அதிக கன மழை பெய்து சுமார் 2 இலட்சத்து 10 ஆயிரம் கன அடி (2.10 Lakh cft / second) கொள்ளளவு தண்ணீர் பாய்ந்திருக்கிறது.) அதன் மூலம் காவிரி நீர் பிடிப்பு பகுதியிலும் KRS அணையிலும் மற்றும் கபினி அணையிலிருந்தும் தண்ணீர் அதிகமாக இருந்ததால் நம் பகுதியான தமிழகத்திற்கு (ஒகேனக்கல்) தங்கு தடையின்றி காவிரி நீர் பாய்ந்தது. அதை மேட்டூர் அணை மூலம் நம்முடைய விவசாயத்திற்கும், குடிதண்ணீருக்கும் பயன்படுத்திக் கொண்டு நம்முடைய டெல்டா விவசாயம் சிறப்பாக இருந்தது. **தமிழகத்தில் தஞ்சை நெற்களஞ்சியமாகத்** திகழ காவிரி நீர் பெரும் உதவியாக இருந்தது. அதாவது மேட்டூர் அணையிலிருந்து சேலம் மாவட்டம், நாமக்கல், பவானி, ஈரோடு, கரூர் வழியாக திருச்சி (கல்லணை), திருவாரூர், தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, கடலூர், நாகப்பட்டினம் போன்ற டெல்டா மாவட்ட விவசாயப் பகுதிகளுக்கு காவிரி நதி நீர் சென்று பின்பு வங்காள விரிகுடாவில் பூம்புகார் என்ற இடத்தில் கடலில் கலக்கிறது. மேற்குறிப்பிட்ட கல்லணையிலிருந்து


பிரியும் 36 கிளை நதிகள் அந்த இடத்திலிருந்து ஓடி பல்வேறு இடங்களுக்குச் சென்று விவசாயத்திற்கும், குடிதண்ணீருக்கும் பயன்பெற்று முடிவில் கடலில் கலக்கிறது. (டெல்டா பகுதிகள்)

குறிப்பு: இந்த ஆண்டு, 2018-ல் அதிக மழை காரணமாக மேட்டூர் அணையிலிருந்து (120 அடி நிரம்பியதால்) பாதுகாப்பு கருதி உபரி நீர் திறந்து விடப்பட்டு காவிரி, கொள்ளிடம் ஆற்று வழியாக தண்ணீர் விடப்பட்டது. கொள்ளிடம் ஆற்றுத் தண்ணீர் கடலில் கலப்பதற்கு முன் **வீராணம் ஏரியை** நிரப்பி பின்பு கடலில் கலந்திருக்கிறது. இப்படி காவிரியில் அதிக வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலக்கட்டத்தில் கொள்ளிடம் ஆறு நிரம்பி வடவாறு வழியாக வீராணம் ஏரியும் நிரம்பி பின்பு மீதி தண்ணீர் சிதம்பரம் அருகில் கடலில் கலக்கிறது. கொள்ளிடம் ஆற்றில் வீராணம் ஏரிக்கு முன்பு கீழ் அணை அமைப்பு உள்ளது.

மேலும், இந்தக் காவிரி நதி / ஆற்றில் அமைந்திருக்கும் பிரதான அணைகளைப் பற்றி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

## கல்லணை (Kallanai)





கரிகாலச் சோழன் (2-ஆம் நூற்றாண்டு)

### கல்லணையின் குறிப்புகள்: (Details)

1. அணை கட்டப்பட்ட நூற்றாண்டு - இரண்டாம் நூற்றாண்டு
2. அணையின் நீளம் 1079 அடி (329m), அகலம் 66 அடி (20m), உயரம் 18 அடி (5.4m)
3. அணை கட்டிய மன்னர் - கரிகாலச் சோழன் (சோழ மன்னன்)

4. அணை கட்டிய பகுதி - காவேரி ஆற்றின் குறுக்கே திருச்சியை அடுத்து கட்டப்பட்டுள்ளது. (தடுப்பணை - Check dam)

5. மாநிலம் - தமிழ்நாடு, தஞ்சை மாவட்டம்.

6. 1829ஆம் ஆண்டு, ஆங்கிலேயப் பொறியாளர் திரு. சர்.ஆர்தர் காட்டன் அவர்களால் அணை மேம்பாடு செய்யப்பட்டது. மேலும் நீர்ப்பாசனம் அபிவிருத்தி செய்யப்பட்டது. அதற்கு Grand Anaicut என்ற பெயர் சூட்டினார்.

குறிப்பு: அந்தக் காலத்தில், இந்த அணை பெரிய கல் பாறைகளாலும், மணல் மற்றும் களிமண்ணால் சேர்ந்த கலவையை வைத்து அணை கட்டப்பட்டது. இது பழந்தமிழரின் அணை கட்டும் திறமையையும், நீர்ப்பாசன மேலாண்மையையும் எடுத்துக்காட்டுகிறது.

# KRS DAM




## கிருஷ்ண ராஜ சாகர் அணை

### குறிப்புகள்: (Details)

1. அணை கட்டப்பட்ட நூற்றாண்டு - 1911 - 1924.
2. அணையின் நீளம் 8600 அடி (2620m), உயரம் 131 அடி (39.8m) - தண்ணீரின் உயரம் 124.80 அடி (38), அதிக கொள்ளளவு - 121.50 tmc ft.
3. அணை கட்டிய மன்னர் - திரு.கிருஷ்ணராஜ உடையார்-IV (மைசூர் மன்னர்) மற்றும் திவான் ஆப் மைசூர் - திரு. T.அனந்தராவ்
4. அணை கட்டிய பொறியாளர்கள் - ஆங்கிலேயப் பொறியாளர்கள் மற்றும் Sir. M.Vishveswariah - Indian Engineer - Chief Engineer PWD - Government of Karnataka.
5. அணை கட்டிய பகுதி - முந்தைய கர்நாடக மாநிலம் (மைசூர் மாகாணம்) - மாண்டியா மாவட்டம் - காவிரி ஆற்றின் குடகு மலை பகுதியில்.

## Mettur DAM



## மேட்டூர் அணை

### குறிப்புகள்: (Details)

1. அணை கட்டப்பட்ட நூற்றாண்டு - 1925 - 1934

2. அணையின் நீளம் 5300 அடி (606 m ), உயரம் 214 அடி (65 m) - தண்ணீரின் உயரம் 120 அடி (36m) மொத்த கொள்ளளவு - 93.460 tmc ft.

3. அணை கட்டிய அரசு - முந்தைய மெட்ராஸ் மாகாணம் - ஆங்கிலேய அரசு.

4. அணை கட்டிய பகுதி - (முந்தைய மெட்ராஸ் மாகாணம்) - சேலம் மாவட்டம் - மேட்டூர் - தமிழ்நாடு.

5. பொறியாளரின் பெயர் - ஆங்கிலேய பொறியாளர் கர்னல் எல்லீஸ் - Col. W.M.Ellis Royal Engineer.


குறிப்பு: 2018ஆம் ஆண்டு கர்நாடகாவில் பெய்த கனமழை காரணமாக கே.ஆர்.எஸ்., கபினி அணைகளிலிருந்து உபரி நீர் திறந்து

விடப்பட்டு, சுமார் 2 லட்சத்து 10 ஆயிரம் கன அடி வினாடிக்கு தமிழக காவிரி பகுதியில் ஓடியது. இது மேட்டூர் அணைக்கு வந்து நிரம்பி, 120 அடி முழுக் கொள்ளளவை எட்டியது. அதன் காரணமாக மேட்டூர் அணையிலிருந்து உபரி நீர் சுமார் 2 லட்சம் கன அடி நிமிடத்திற்கு திறந்து விடப்பட்டது. அது காவிரியிலும், கொள்ளிடம் ஆற்றில் நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் இந்த ஆண்டு காவிரியில் நீர்ப்பெருக்கு அதிகமாக ஓடியது. கொள்ளிடம் ஆற்றிலும் அதிக நீர் ஓடி வீராணம் ஏரி நிரம்பி மீதி தண்ணீர் கடலில் கலந்திருக்கிறது.

மேலும் காவிரியின் இணை நதிகளான கபினி, ஹேமாவதி மற்றும் ஆரங்கி என்ற நதிகளும்; கர்நாடகாவில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பிரதான காவிரி நதியுடன் இணைந்து பின்பு காவிரி ஆறாக வருகிறது. இப்படி அமைந்துள்ள காவிரியின் நதிநீர் ஓட்டத்தில் பிரச்சனையில்லாமல் இருந்து வந்தது. எனினும் கர்நாடக அரசு, அவ்வப்பொழுது பருவமழை குறைவாக இருக்கும் காலக்கட்டத்தில் முன்பு ஏற்படுத்திய ஒப்பந்தத்தின்படி முறையாக தண்ணீரைத் தரவில்லை. அதனால் தமிழக டெல்டா விவசாயம் பாதிப்படைந்தது. அதை முன்னிட்டு தமிழக டெல்டா விவசாய சங்கத்தினர் 1971-1972-ல் உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்தனர். அதற்கு தமிழக அரசும் துணை நின்றது. அதாவது, பழைய ஒப்பந்தம் 1924-ன் படி, தமிழகத்திற்கு கர்நாடக அரசு காவிரித் தண்ணீரை தங்கு தடையின்றி கொடுக்க வேண்டுமென்றும், அந்த ஒப்பந்தம் 50 ஆண்டுகள் நிலைத்து நிற்குமென்று ஏற்படுத்தப்பட்டது. அந்த நிபந்தனையை முன் வைத்து, கர்நாடக அரசு, அந்த பழைய ஒப்பந்தம் 50 ஆண்டுகள் வரைதான் செல்லும். அதன்படி 1974-ல் முடிந்துவிட்டது. ஆகவே புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்புதான் தண்ணீர் பகிர்மானம் ஒழுங்குபடுத்தப்படும் என்று சொன்னார்கள். அதைக் கேட்ட அன்றைய தமிழக அரசு தமிழக சட்டசபையில் பேசி கலந்துரையாடல் செய்து ஒரு சமாதானமான முடிவுக்கு வரவேண்டு மென்று தீர்மானித்தார்கள்.

அந்த சூழ்நிலையில், கர்நாடக அரசு தண்ணீரைத் தேக்கி வைக்க மறுபடியும் **காவிரியின் துணை நதியான** கபினியில் 1974-ம் ஆண்டு ஒரு அணையைக் கட்டியது. அதுதான் கபினி அணை. இந்த அணையின் மூலம் காவிரியின் நீர் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தலாம் என்ற எண்ணத்தில் கட்டியது. (காவிரியின் பிரதான நதியிலிருந்து வரும் நீரும், கபினி அணையிலிருந்து வரும் நீரும் கர்நாடகா பகுதியில் நரசிபுரா என்ற இடத்தில் சங்கமமாகிறது. அதிலிருந்து பிரதான காவிரியாக தமிழகத்திற்கு வருகிறது). இதை முன்னிட்டு தமிழக அரசு வருத்தமடைந்து, கர்நாடக அரசு பழைய ஒப்பந்தத்திலிருந்து விலகுவது போலும், அந்த நிபந்தனைகளுக்கு உடன்பட்டு செயல்படுவதில்லையென்பதை உணர்ந்தார்கள்.

## கபினி அணை



### குறிப்புகள்: (Details)

1. அணை கட்டப்பட்ட ஆண்டு - 1974.

2. அணையின் நீளம் 2284 அடி (696m), உயரம் 166 அடி (50 m) - தண்ணீரின் உயரம் 65 அடி (20 m), கொள்ளளவு 19.5 tmcft.

3. அணை கட்டிய அரசு - கர்நாடக அரசு.

4. அணை கட்டிய பகுதி - கர்நாடக மாநிலம் - மைசூர் மாவட்டம் - கபினி (கேரளாவிலிருந்து வரும் கிளை நதி கபினி நதியாக கர்நாடக எல்லைக்குள் ஓடுகிறது.)

5. பொறியியல் துறை - பொதுப்பணித் துறை - கர்நாடக அரசு.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட அணைகளோடு, தமிழ்நாட்டில் காவிரி நதி பாயும் இடங்களில் முந்தைய காலகட்டத்தில் **முக்கொம்பு** பகுதியில் 1836ல் சர். ஆர்தர் காட்டன் என்ற ஆங்கிலேய பொறியாளரால் முக்கொம்பு மேல் அணை கட்டப்பட்டது. இதன் நீளம் 630 மீட்டர். இந்த நீளத்தில் கட்டி உள்ள அணையில் 45 மதகுகள் வழியாக தண்ணீர் செல்கிறது. அதாவது, இதன்பகுதி - கரூர் அடுத்து (அகண்ட காவிரி) இரு பிரிவு முக்கொம்பு அணை (மேல் அணை) கட்டப்பட்டு தண்ணீர் பிரித்து விடப்பட்டுள்ளது. (காவிரி & கொள்ளிடம் ஆறுகள்) பிற்காலத்தில் அது மேம்பாடு செய்யப்பட்டது. மேலும், இந்த அணைக்கு முன்பு **மாயனூர்** என்ற இடத்தில் மாயனூர் தடுப்பு அணையும் கட்டப்பட்டுள்ளது. இவை இரண்டும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. (மாயனூர் தடுப்பு அணை மற்றும் முக்கொம்பு மேல் அணை)

மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் கர்நாடக அரசுக்கும், தமிழக அரசுக்கும் பனிப்போர் தொடர்கதையாக இருந்தது. எனினும் நம்முடைய பழமையான திருக்குறளில் இருக்கிற திருவள்ளுவரின் அறிவுரைப்படி

‘‘தெய்வத்தால் ஆகாதெனினும், முயற்சி தன்
மெய்வருத்தக் கூலி தரும்.”

என்ற குறளுக்கேற்ப தமிழக அரசும், டெல்டா விவசாய சங்கங்களும் சேர்ந்து மத்திய அரசுக்கு காவிரி நதி நீர் பங்கீடு தொடர்பாக பல கோரிக்கைகளை வைத்து அறப்போராட்டங்களை நடத்தினார்கள். அதற்கு செவி சாய்த்த மத்திய அரசு 1989-ல் அன்றைய பிரதமராக இருந்தவர்

காவிரி நடுவர் மன்றம் என்ற அமைப்பை உருவாக்கினார். மேலும் இந்த அமைப்பு இரு அரசு பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பார்கள் என்ற அறிவுரையையும் கூறியது. அதைத் தொடர்ந்து, நடுவர் மன்ற நிபுணர்கள், தமிழகம் கர்நாடக பாசனப் பகுதிகளில் 1991-ம் ஆண்டு ஒரு ஆய்வு நடத்தி இடைக்காலத் தீர்ப்பை வழங்கினார்கள். ஆனால் கர்நாடக அரசு அந்த ஆணைக்கு கீழ்ப்படிந்து உரிய அளவு தண்ணீரைக் கொடுப்பதற்கு மறுத்தது. அதை முன்னிட்டு தமிழக அரசு உண்ணாவிரதப் போராட்டங்களிலும், விவசாய சங்கங்கள் பொதுமக்களின் துணையுடன் போரட்டங்களையும் நடத்தி வந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இயற்கையின் வரப்பிரசாதத்தால் பருவமழை பொழிந்ததால் அதிகளவு மழையினால் வரும் தண்ணீரை தமிழகத்திற்கு கொடுத்து வந்தது. எனினும் தமிழகத்திற்கு கொடுக்க வேண்டிய முறையான அளவு தண்ணீரைக் கொடுக்காததால் தமிழக டெல்டா விவசாயம் பாதிக்கப்பட்டது. சில விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டனர்.

மீண்டும் 1995-ம் ஆண்டு போதிய மழை இல்லாததால் காவிரி நதிநீர் பங்கீடு பிரச்சனை மறுபடியும் விஸ்வரூபம் எடுத்தது. அதை முன்னிட்டு தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றம் சென்று முறையிட்டது. அதன்படி உச்சநீதிமன்றம் கர்நாடக அரசைக் குறைந்தளவு தண்ணீராவது கொடுக்கும்படி ஆணையிட்டது. அதற்கு கர்நாடக அரசு மறுத்து விட்டது. இந்த சூழ்நிலையில் தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று அன்றைய பாரதப் பிரதமர் 1998-ம் ஆண்டு பிரதமரின் தலைமையில் காவிரி ஆணையம் (நடுவர் மன்றம்) என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அதில், நான்கு மாநில முதல்வர்கள் - புதுச்சேரி, தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகத்தின் உறுப்பினர்களாக இருந்தனர். இதற்கு ஆலோசனை வழங்க காவிரி கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட அமைப்புகள் மூலம் காவிரி நதிநீர் பங்கீட்டு முறை தமிழகத்திற்கும், காவிரிக்கும் பிரச்சனையில்லாமல் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று முயற்சித்தார்கள். இருப்பினும் சில வருடங்களில்

காவிரி நதிநீர் தமிழக டெல்டா விவசாயத்திற்கு முழுமையாக வந்து சேரவில்லை. அதை முன்னிட்டு, தமிழக அரசும், தமிழக விவசாய சங்கங்களும் சட்டப்படி கோரிக்கைகளையும், போராட்டங்களையும் நடத்திக் கொண்டு வந்தனர். அதனால் **காவிரி நடுவர் மன்றம்** செயல்பட்டு ஆலோசனை செய்து, நான்கு மாநிலத்தின் தண்ணீர் தேவையை அறிந்து **2007-ம் ஆண்டு பிப்ரவரி 5-ம் தேதி** ஒரு **தீர்ப்பை வழங்கியது.** அதன்படி கீழ்க்கண்ட சரத்துக்கள் உத்தரவிடப்பட்டன.

கர்நாடக விவசாயம் மற்றும் குடிதண்ணீருக்கு 270 டிஎம்சியும், தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு 192 டிஎம்சியும் மற்றும் கேரளாவிற்கு 21 டிஎம்சியும், காவிரி நதி நீர் பங்கீட்டுக் கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு வழங்கினர். இதையும் கர்நாடக அரசு எதிர்த்தது. அதை முன்னிட்டு தமிழக அரசும், தமிழகத்திலுள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும், தமிழக விவசாயச் சங்கங்களும் அவர்களுடைய கோரிக்கையைத் தெரிவித்தனர். அந்த சமயம் தமிழக முதல்வராக இருந்தவர் அந்த நடுவர் மன்ற தீர்ப்பை அரசிதழில் வெளியிடக்கோரி கோரிக்கையை வைத்தார். பிற்காலத்தில் அவர் மறுபடியும் ஆட்சிக்கு வரும் போது மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து அரசிதழில் வெளியிட ஏற்பாடு செய்தார். அதன்படி 2013-ல் நடுவர் மன்றத் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது. (Government Gazette Notification Published in 2013). இருப்பினும் **காவிரி நதிநீர் பங்கீடு பிரச்சனை** தீர்வு காணப்படாமல் தொடர்ந்து வந்தது. அதாவது, காவிரி நதி நீரை பங்கீடு செய்து கொள்வதில் தமிழ்நாடு, கர்நாடகம், புதுச்சேரி மற்றும் கேரளா ஆகிய நான்கு மாநிலங்களுக்கிடையே கடந்த 125 ஆண்டுகளாக இருந்து வரும் பிரச்சனை தீர்வு எட்டாமல் **கானல் நீர் போல்** காட்சியளித்துக் கொண்டிருந்தது. மேலும், கர்நாடக அரசு அணைகளிலிருந்து காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி தண்ணீர் திறந்து விட மறுப்பதால் தமிழ்நாட்டின் காவிரி டெல்டா பகுதிகளில் விவசாயம் ஆண்டுதோறும் பாதிக்கப்பட்டு வந்தது. இது ஒரு தொடர்கதையாகவே இருந்து வந்தது.

## உச்சகட்டக் கோரிக்கை:

மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் இரு மாநிலங்களுக்கிடையே ஒரு சமாதானமான மற்றும் சாதகமான மனநிலை இல்லாமல் இருந்தது. அதாவது 2007-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ம் தேதி வழங்கிய **நடுவர் மன்றத் தீர்ப்பின்படி** கர்நாடக அரசு தமிழகத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் 10 மாத கால இடைவெளியில் 192 டி.எம்.சி தண்ணீரை காவிரியில் திறந்து விடவேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. ஆனால் தமிழகம் இதை ஏற்கவில்லை. கூடுதலாக விவசாய நிலங்கள் அபிவிருத்தி மற்றும் குடிதண்ணீர் தேவையை முன்வைத்து 72 டி.எம்.சி தண்ணீர் அதிகம் கொடுக்க வேண்டுமென்று **உச்சநீதிமன்றத்தில்** "அப்பீல்" செய்தது. அதே சமயம் கர்நாடக மாநிலமும், தமிழ்நாட்டிற்கு வழங்கும் காவிரி நீரின் அளவில் 132 டி.எம்.சி குறைக்க வேண்டுமென்று உச்சநீதிமன்றத்தை அணுகியது. அந்தச் சூழ்நிலையில், **உச்சநீதிமன்றம்** அந்த வழக்குகளை விசாரணை மூலம் நடத்தியது. பலதரப்பு வாதங்களும் இரு மாநில அரசு பிரதிநிதிகள் சார்பாகவும், அரசு வழக்கறிஞர்கள் சார்பாகவும் விவாதிக்கப்பட்டது.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடந்துகொண்டிருந்த சூழ்நிலையில், தமிழக அரசும் மத்திய அரசிற்கு பல கோரிக்கைகளை வைத்து நல்ல தீர்ப்பு கிடைக்க வலியுறுத்தியது. மேலும் தமிழகத்திலுள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும், தமிழக விவசாயச் சங்கங்களும், விவசாயச் சங்கங்களின் முக்கிய உறுப்பினர்களாகிய அனைவரும் ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் நடத்தினார்கள். இதில் தமிழக விவசாயச் சங்கங்களின் கூட்டமைப்பு சங்கத்தின் தலைவர் திரு.P.R.பாண்டியன், தமிழக தென்னிந்திய நதிகள் இணைப்புத் தலைவர் திரு.அய்யாக்கண்ணு, காவிரி உரிமை மீட்புக்குழு ஒருங்கிணைப்பாளர் பெ.மணியரசன், தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைப்பொருட்கள், விவசாயிகள் நலஉரிமை பாதுகாப்பு சங்கத்தின் பொதுச்செயலாளர் காவிரி S.ரங்கநாதன், தலைவர் V.ராஜாராமன், திருவாரூர் மாவட்டத் தலைவர் பயரி எஸ்.கிருஷ்ணமணி, காவிரி டெல்டா விவசாயிகள்

குழுமத்தின் பொதுச்செயலாளர் வெ.சத்யநாராயணன், தமிழக இயற்கை உழவர் இயக்கத்தின் மாநில பொதுச்செயலாளர் நெல்.ஜெயராமன், தமிழக விவசாயிகள் நலச்சங்கத்தின் தலைவர் க.சேதுராமன், மாநில தலைவர் த.புண்ணியமூர்த்தி மற்றும் அனைத்து நிர்வாகிகளும் தஞ்சை விவசாய உரிமை மீட்புத் தலைவர் திரு.சுந்தரம் மற்றும் தமிழ் மாநில காங்கிரசின் விவசாய அணி தலைவர் திரு. புலியூர் ஏ.நாகராஜன் அவர்கள், தலைவர், தமிழ் தேசிய விவசாய சங்கம் - திரு. கே.ஆர்.எஸ். மணியன் அவர்களின் சார்பிலும் நடந்த ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் மத்திய அரசின் கவனத்தையும், உச்சநீதிமன்றத்தின் கவனத்தையும் ஈர்த்தன. அதாவது மேலே குறிப்பிட்ட அனைத்து போராட்டங்களும் தமிழகத்திற்கு காவிரி நதிநீர் பங்கீடு சாதகமாகவே இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் போராட்டங்கள் நடந்தன. அதனால் உச்சநீதிமன்றம் தலைமை நீதிபதி **திரு. தீபக் மிஸ்ரா** அவர்கள் இந்த காவிரி நதிநீர் பங்கீடு வழக்கை நடத்த நீதிபதிகள் திரு.அமித்வராய் மற்றும் திரு.கான்வில்சன் ஆகியோரைக் கொண்ட சிறப்பு பெஞ்சை அமைத்தது. அந்த பெஞ்ச், வாரத்திற்கு மூன்று நாட்கள் வீதம் காவிரி நதிநீர் பங்கீடு வழக்கை விசாரித்தது. இந்த நிலையில், பல மாதங்கள் விவாதம் நடந்த பின்பு, உச்சநீதிமன்றத்தால் காவிரி வழக்கின் இறுதித் தீர்ப்பு 2018-ம் ஆண்டு பிப்ரவரி 16-ம் தேதி வெளியிடப்பட்டது. (16.02.2018) அதனால் 125 ஆண்டு கால பிரச்சனைக்கு ஒரு தீர்வு கிடைத்தது. அந்தத் தீர்வின் சாரத்துக்கள் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளன.

1. தமிழகத்திற்குக் கிடைத்த காவிரி நதி நீர் 177.25 டி.எம்.சி ஆகும். (ஒவ்வொரு ஆண்டும் 10 மாத இடைவெளியில் தண்ணீர் திறந்து விட வேண்டும். மேலும் ஒவ்வொரு பருவகாலத்திலும் தேவைப்படும் தண்ணீரையும் கொடுக்க வேண்டும்). டி.எம்.சி: - tmc - thousand million cubic feet - ஒரு டி.எம்.சி. என்பது 100 கோடி கன அடியாகும். (1 tmc = 100 crores cft- 1 cft = 28.3 Ltrs.)

2. காவிரி நதிநீர் கர்நாடகத்திற்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்துள்ளது 187.75 டி.எம்.சி ஆகும்.

3. காவிரி நதிநீர் கேரளா மாநிலத்திற்கு 30 டி.எம்.சியும் மற்றும் புதுச்சேரிக்கு 7 டி.எம்.சியும் வழங்கப்பட வேண்டும்.

4. மேற்குறிப்பிட்ட காவிரி நதிநீர் அளவைப் பங்கீடு செய்து கொடுப்பதற்கு ஒரு செயல் திட்டம் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசை கேட்டுக்கொண்டது. (A Scheme to be formed to regulate the water supply to Tamil Nadu and other states).

5. 15 ஆண்டுகளுக்கு தீர்ப்பின் உத்தரவு நீடிக்கும்.

6. காவிரி நீரை எந்த மாநிலமும் சொந்தம் கொண்டாட முடியாது. (It is a common river for all southern states).

**குறிப்பு: ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நீரின் அளவுகள்.**

1. தமிழகம் - 177.25 tmc - பிலிகுண்டுலுவிலிருந்து கணக்கிடப்படுகிறது. (மத்திய நீர்வளத் துறை குழுமம் மூலம் - Central Water Commission இந்த அமைப்பு மூலம் செயல்படுத்தப்படுகிறது.)

2. கேரளா - கபினி அணையிலிருந்து 21 tmc, பவானியிலிருந்து 6 tmc மற்றும் அமராவதியிலிருந்து 3 tmc மொத்தம் 30 tmc.

3. பாண்டிச்சேரி - கல்லணை, காவிரி ஆறுகளிலிருந்து செல்கிறது 7 tmc. (காரைக்கால் பகுதிக்கு.)

4. கர்நாடக மாநிலத்திற்கு 187.75 tmc. கர்நாடக மாநில காவிரி அமைப்பு மூலம்.

மேற்குறிப்பிட்ட தீர்ப்பு தமிழகத்திற்கும், கேரளாவிற்கும் மற்றும் புதுச்சேரிக்கும் அவரவர்கள் கோரிக்கை வைத்த அளவை விட குறைவாக இருந்தாலும், நீண்ட காலப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு கிடைத்தது என்று மகிழ்ச்சியடைந்தனர். இருப்பினும் தமிழக அரசு மேற்குறிப்பிட்ட தண்ணீர் பங்கீடு முறையை செயல்படுத்த காவிரி மேலாண்மை வாரியம் - **Kaveri Management Board** அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தியது. அதற்கு ஆறு வார காலம் காத்திருந்து கிடைக்குமென்ற நம்பிக்கையில் இருந்தது.

அதைத் தொடர்ந்து காவிரி நதிநீர் பங்கீடு விஷயத்தில் குடிநீர் பயன்பாட்டிற்கு சமமான முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை இரு மாநிலங்களும் அறிந்தார்கள். அதாவது தமிழகத்தில் பாசனப் பகுதிகளில் நிலத்தடி நீர் அதிகம் இருப்பதைக் கருத்தில் கொண்டு, காவிரி பாசனப் படுகையில் கூடுதலாக 10 டி.எம்.சி வரை நிலத்தடி நீரை எடுத்துக் கொள்ளலாமென்ற தீர்ப்பையும் மற்றும் கர்நாடக மாநிலத்திற்கு கூடுதலாக 4.7 டி.எம்.சி பெங்களூர் நகர குடிநீர் தேவைக்கு எடுத்துக் கொள்ளலாமென்ற தீர்ப்பும் வரவேற்கத்தக்கதாக இருந்தது. இருப்பினும் தமிழகத்திற்கு மொத்த அளவு தேவை கோரிக்கையில் 14.75 டி.எம்.சி குறைக்கப்பட்டதென்ற தீர்ப்பை தமிழக அரசும், மக்களும், தமிழக விவசாயிகளும், எதிர்க்கட்சித் தலைவர்களும், பிரதிநிதிகளும் வருத்தத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இருந்தது. இருப்பினும்; நீண்ட நாள் பிரச்சனைக்கு ஒரு தீர்வு கிடைத்ததென்று ஓரளவு சமாதானமாக இருக்கிறார்கள். மேலும், இந்தத் தண்ணீரை வைத்து டெல்டா விவசாயத்தை சிக்கனமாகப் பயன்படுத்தி சில பொறியியல் மேம்பாடுகள் செய்து நீர்ப்பாசனத்தை அபிவிருத்தி செய்து உபயோகிக்கலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். இந்த நேரத்தில் திருவள்ளுவரின் திருக்குறளையும் மனதில் வைத்து நம்பிக்கையாக இருக்கிறார்கள்.

*நீரின்றி அமையாது உலகெனில் யார் யார்க்கும்*
*வான் நின்று அமையாது ஒழுக்கு.*